DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | பவுனம்மாள் |
| Husband's Name | சம்மந்த மூர்த்தி |
| Village | குரிசிலாப்பட்டு |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | இல்லத்தரசி |
| Age | 54 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **05.03.2026**

**O.S. No. 163 / 2004** **பி.வா.சா. 3** **11. 40AM – 11. 50AM**

**குறுக்கு விசாரணை (1-ம் பிரதிவாதி தரப்பில்)**

1. வழக்கு சொத்தானது ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தை பூங்காவனம் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அவர் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை இறந்துவிட்டார். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 10.10.2001-ம் தேதி இறந்தார். எனது தந்தை என் பெயருக்கும் மற்றும் எனது தங்கை மல்லிகா பெயருக்கும் எழுதி வைத்த உயிலானது பதிவு செய்யப்பட்டதா இல்லையா என்றால் பதிவு செய்யப்பட்ட உயிலாகும் மேற்படி உயில் எப்பொழுது எங்களுக்கு எழுதி வைத்ததாக நான் கூறுகிறேன் என்று சொன்னால் 24.09.2001-ம் தேதி எழுதி வைத்தார்.

2. அந்தப் பதிவு செய்யப்பட்ட உயிலின் ஆவண எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உயிலை ரத்து செய்துவிட்டு எனது தந்தை எங்களது சகோதரர்களுக்கு ஒரு பதிவு செய்யப்படாத உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் அது போலியானதாகும். மேற்படி நான் கூறும் போலியாக எழுதப்பட்ட உயிலின் தேதி எனக்கு தெரியுமா என்றால் 08.10.2001-ம் தேதி ஆகும். எனது தந்தை கையெழுத்து போடும் பழக்கம் உள்ளவரா அல்லது கைநாட்டு வைப்பவரா என்றால் கைநாட்டு வைப்பவர் தான்.

3. எங்களது பெயருக்கு எழுதி வைத்த உயிலை ரத்து செய்துவிட்டு தான் எங்களுடைய சகோதரர்களுக்கு எனது தந்தை உயில் எழுதிவிட்டார் என்று சொன்னால் அது தவறு. 08.10.2001–ம் தேதி எங்களுடைய சகோதரர் பெயரில் எழுதி வைத்த உயிலானது சட்டப்படியாக சரியானது நான் தவறாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறுவிசாரணை இல்லை.**

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.